திரு. ஜே. ஜேம்ஸ் : கடத்தல் அரிசி பறிமுதல் செய்யப்படும்போது அதற்கான ரசீதைப் பறிமுதல் செய்கிற அதிகாரிகள் கொடுப்பதில்லை. அகவே அதற்கான கணக்குகள் இந்தத அரசாங்கத்தினிடம் இல்லை. எனவே இனிமேலாவது பறிமுதல் செய்கிற அரிசிக்கு உடனடியாக ரசீது வழங்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அரசு தாக்கீது அனுப்புமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தக் கேள்விக்கும் அவர்கள் சொல்வதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் சொல்வது வேறு. காய்ந்த கருப்பந்தோகையின் அடியில் மறைத்து அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாக இலாகாவிற்கு அறிவித்து அவர்கள் சென்று சோதனை செய்து எடுத்திருக்கிறார்கள். அந்த மூட்டைகள் குறித்து எவரும் உரிமை கோராததால், அவை யாருக்குச் சொந்தம் என்று தெரியாததால் யாருக்கு ரசீது கொடுப்பது என்று தெரியவில்லை. வழக்குப் போடமுடியாமல் மூட்டைகளை மட்டும் பறிமுதல் செய்து வைத்திருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sir.

MR. DEPUTY SPEAKER : No point of Order, during question-hour. Honourable Members must realise the importance of the question hour and should have the reduced the number of questions in the beginning itself. I have to allow 25 or 30 supplementaries for every question.

Sales centres of Food Corporation.

*97. Q. : THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Honourable the Minister for Food be pleased to state :

(*a*) whether the Government is aware of the plan of the Food Corporation to open (1) wholesale and (2) Retail shops in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி : (அ) &(இ) : வெளிச்சந்தையில் நிலவுகின்ற விலைகளைக் கருத்திற்கொண்டு இந்திய உணவுக் கழகம் வரையறுக்கும் விலைகளில் கோதுமை, சோளம், பருப்பு வகைகள் ஆகிய வற்றை விற்பனை செய்ய அக்கழகம் சென்னை நகரில், மொத்த விற்பனை நிலையம் ஒன்றினைத் தொடங்கியிருந்தது.

Tourist Traffic Advisory Committee.

*98. Q. : THIRU K. T. K. THANGAMANI : Will the Honourable the Minister for Backward Classes be pleased to state :

(*a*) whether it is a fact that a Tourist Traffic Advisory Development Committee has been formed in Tiruchirappalli,

(*b*) if so, the names of its members ; and

(*c*) whether a statement will be laid on the Table of the House on the working of similar Committees in Madurai and Ooty ?

1973 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ)—ஆம்.

(இ) & (உ) : ஓர் அறிக்கை* அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தஞ்சை, திருச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் அந்தக் குழுக்கள் எந்த முறையில் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திருச்சியில் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழு பொங்கல் வாரத்தை சுற்றுலா வாரமாகக் கொண்டாடுகிறார்கள். எப்படி எப்படி சுற்றுலாவின் தரத்தை வளர்ப்பது, எப்படி எப்படி சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது என்பதற்கான ஆலோசனைகளை இந்தக் குழு அடிக்கடி கூறி ஆலோசனைகள் நல்குகிறது.

திரு கே. டி. கே. தங்கமணி : இதில் பொது மக்களுடைய பிரதிநிதியாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட இல்லையே, அதற்கு ஏதாவது காரணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா இராசாராம் : அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு குழுவை உருவாக்கிக்கொள்கிறார்கள். அதில் உள்ளூரிலுள்ள ஹோட்டல்காரர்கள், அல்லது சுற்றுலாப் பயணத்தில் விருப்பமுள்ளவர்கள் இவர்களைச் சேர்த்து அந்தக் காரியம் நடைபெறுகிறது. அதில் சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்து கொள்ளாததற்கு எந்தவிதமான காரணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டு காடுகளிலுள்ள யானைகள்.

*99 வினா—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா?

(அ) தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான காடுகள் அனைத்திலும் உள்ள யானைகள் கணக்கிடப்பபட்டுள்ளனவா,

(இ) ஆம் எனில், அவற்றைப் பராமரிக்க அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு ஓ.பி. இராமன் : (அ) & (இ) : தமிழக அரசுக்குச் சொந்தமான காடுகள் அனைத்திலும் உள்ள யானைகள் கணக்கிடப்படவில்லை. யானைகளை வேறுபாடின்றிக் கொல்லுவதினின்றும் காப்பதற்காக, 1873-ஆம் ஆண்டின் தமிழ்நாடு காட்டு யானைகள் பாதுகாப்புச் சட்டம் தமிழ்நாடு முழுவதிலும் அமுலிலுள்ளது.

---

* 105–109-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[1973 பிப்ரவரி 9

சுருளியாறு நீர் மின் திட்டம்.

*100. வினா—திரு பெ. செளந்தரபாண்டியன் : மாண்புமிகு மின் சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள சுருளி நீர் வீழ்ச்சியில் நீர் மின்சார நிலையம் ஒன்றை நிறுவும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டின் நான்காவது திட்டத்தில் சுருளியாறு புனல் மின் திட்டத்தைச் சேர்த்துக் கொள்ளத் திட்ட ஆணைக்குழு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. திட்டத்தின் தொடக்கப்பணிகளை எடுத்துக்கொள் கொள்ளவும் மாநில அரசிற்கு திட்ட ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடுகளுக்குத் திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இடையே, இந்த நீர் மின் திட்டத்தின் துவக்கப்பணிகள் தமிழக மின்வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. மு. சுருளிவேல் : சென்ற மாதம் 14-ந் தேதி அன்று இந்த சுருளி நீர் வீழ்ச்சியில் நீர் மின்சார நிலையம் நிறுவும் திட்டத்தை அமல் செய்யும் இடத்திற்குச் சென்று பார்த்தேன். அங்குள்ள தொழிலாளர்கள் வேலையில்லாமல் தாங்கள் ஊதியம் பெறுவதாக ஒரு குறைபாட்டினை பொறுப்புணர்ச்சியோடு கூறினார்கள். அதற்குக் காரணமாகக் கூறியது பல்வேறு திட்டங்களைப் பார்க்க ஒரே மேல் அதிகாரி இருப்பதால் இத்திட்டத்தில் அவருடைய முழுக் கவனத்தையும் செலுத்த முடியவில்லை. ஆகவே வேலை தாமதப்படுகிறது என்று கூறினார்கள். அந்தத் தண்ணீரில் மின்சாரம் உற்பத்தியான பிறகு வைகை அணைக்கு வருவதற்குப் பதிலாக ராஜபாளையத்திற்குத் திருப்பி விடப்படுகிறது என்ற தவறான பிரசாரத்தைத் திட்டமிட்டு சில பகுதியினர் அங்கு எழுப்பி வருகிறார்கள். எனவே அந்த மக்களின் நியாயமான பயத்தைப் போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தவறான பிரசாரத்தை நம்பத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரம் ஒரு வழியாக முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]